நகர் ஊரமைப்பு துறை

உறுப்பினர் செயலர்/துணை இயக்குநர், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை: திரு.கி.சண்முகம், எம்.இ., எம்.பி.ஏ.,

---

ந.க.எண்.2619/2020/கிமா(ஒபுநவகு) நாள்: 30.05.2022

பொருள் : மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் – ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் – கிருஷ்ணகிரி மாவட்டம் – ஒசூர் மாநகராட்சி (ம) வட்டம் – மூக்கொண்டபள்ளி கிராமம், சர்வே எண்.449/1–ல் பரப்பு 0.9266 ஏக்கர் (அ) 3750.00 ச.மீ. பரப்பளவு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரியது – ஒப்புதல் வழங்குதல் – குறித்து.

பார்வை :

1. மனுதாரர் திரு. எம்.வி.அஸ்வினி, பெங்களூர் அவர்களின் விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் நாள்:04.12.2020.
2. உறுப்பினர் செயலர்(பொ), ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.2619/2020/கிமா (ஒபுநவகு), நாள்.24.12.2020.
3. ஆணையாளர், ஒசூர் மாநகராட்சி, ஒசூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.9045/2020/எப்1, நாள்.15.03.2022 (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.04.04.2022).
4. மேற்பார்வை பொறியாளர், கிருஷ்ணகிரி மின்பகிர்மான வட்டம் அவர்களின் கடிதம் எண்.மே.பொ./கிமிபவ/செ.பொ/ கட்டிடவியல்/கோப்பு எண்.253/22, நாள்.30.04.2022.
5. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020/போ, நாள்:24.12.2020.
6. அரசானை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.04.06.2004.
7. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019 மற்றும்
   அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2020.
8. அரசானை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(3), நாள்.23.09.2020.
9. அரசானை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை UD4(1), நாள்.09.12.2020.
10. அரசு கடிதம் எண்.19113/நவ4(3).2017–1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்.30.08.2017.
11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/LA1, நாள்.08.09.2017

..2

12. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.5534/1997/முதி1, நாள்.13.08.1999.
13. உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சி குழுமம் அவர்கள் கடிதம் ந.க.எண்.2619/2020/கிமா(ஒபுநவகு), நாள்.13.05.2022.
14. மனுதாரர் திரு. எம்.வி.அஸ்வினி, பெங்களூர் அவர்களின் கடிதம் நாள்.20.05.2022.

****

உத்தரவு

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டம், ஒசூர் மாநகராட்சி, மூக்கொண்டபள்ளி கிராமம், சர்வே எண்.449/1-ல் பரப்பு 0.9266 ஏக்கர் (அ) 3750.00 ச.மீ. பரப்பளவு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி பார்வை (1)-ல் சுட்டிய கடிதத்துடன் பெறப்பட்ட விண்ணப்பம் மற்றும் இணைப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, பார்வை (2)-ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை (3)-ல் காணும் கடிதத்தின்படி சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை ஆணையாளர், ஒசூர் மாநகராட்சி, ஒசூர் அவர்களுக்கு **தானப்பத்திர எண்.3700/2021, நாள்.25.02.2021** மற்றும் **தானப்பத்திர எண்.214/2022, நாள்.05.01.2022**-ல் தானமாக ஒப்படைக்கப்பட்டும், பார்வை (4)-ல் காணும் கடிதத்தின்படி தலைவர்/நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சென்னை அவர்களுக்கு **தானப்பத்திர எண்.3702/2021, நாள்.25.02.2021**-ல் தானமாக ஒப்படைக்கப்பட்டும் பெறப்பட்டுள்ளதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

விவரம்		பரப்பளவு 3750.00 ச மீ
மனைப்பிரிவின் மொத்த பரப்பு	:	0.9266 ஏக்கர் (அ) 3750.00~~ஹெக்டேர்~~
கோரிய மனைகள்	:	17 மனைகள்
ஒதுக்கிய மனைகள்	:	17 மனைகள்
உத்தேச மனைப்பிரிவு சாலை பரப்பு	:	1626.16 ச.மீ.
மனைப்பிரிவு பரப்பு (சாலை பரப்பு நீங்கலாக)	:	2123.84 ச.மீ.
உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:		
உள்ளாட்சிக்கான பொது ஒதுக்கீடு	:	15.92 ச.மீ. (0.75 %)
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான பொது ஒதுக்கீடு	:	14.87 ச.மீ. (0.70 %)

மனைப்பிரிவிற்கு இணைப்பில் உள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி, ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ./ஒ.பு.ந.வ.கு.(கிமா)எண்.47/2022** என எண்ணிடப்பட்டு மனை ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் திட்ட அனுமதி வழங்கும்பொருட்டு, மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி **ம.வ./தி.அ./ஒ.பு.ந.வ.கு(கி.மா)எண்.10/2022** என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட 2 அசல் வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

மேலும், உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும் போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.9 (ஆ)-ன்படி அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவைத் துறைக்கும், தகவலுக்கும் உரிய நடிவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

செயலாணைக் கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைகள், வரைபடங்கள் மற்றும் ~~அசல் பத்திர நகல்~~ பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச்சான்றினை உடன் அனுப்பி வைக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனை:</u>

1. (a) பார்வை (9)-ல் கண்ட அரசாணை மற்றும் பார்வை (7)-ல் கண்ட TNCDBR-2019 விதி எண்.47 (11)-ன்படியும் மாநகராட்சி / நகராட்சி பகுதி எனில் "Collecting the necessary fees including the charges for providing amenities like roads, storm water drains and street lights from the applicants". After collecting the necessary fees the final layout sketch, permit of planning authority along with approval of Local Body shall be issued to the applicant(s) directly.

   (b) மாநகராட்சி / நகராட்சி அல்லாத பகுதிகளில் "Shall collect the necessary fees and issue the final layout sketch, permit of planning authority along with the permit of local body to the applicant(s) directly, only after ensuring that the applicant lays Tar Roads. Provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT, provide necessary street lights etc., as per the standards specified by the Local Body".

2. (EWS) பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது. ஆனால் கிராமப்புற பகுதிகளில் மனை ஒப்புதல் வழங்கப்பட்ட 3 வருடங்களுக்கு மேலாகியும் EWS மனைகள் விற்க இயலாத நிலை இருப்பின் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.01.2021-ன் படி EWS மனைகளை ஒருங்கிணைப்பு செய்ய விண்ணப்பித்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

3. பார்வை (10) மற்றும் (11)-ல் கண்ட அரசு கடிதம் மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சியின் பெயரில் உரிமை மாற்றம் செய்து வருவாய் ஆவணங்களில் சர்வே எண் உட்பிரிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

4. "The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated:22.06.2017 have approved the TamilNadu Real Estate (Regulation & Development) Act 2016. The promotor has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority"-ன்படி நடவடிக்கை தொடருமாறு மனுதாரரை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

5. பார்வை 6 –ல் காணும் அரசாணையின்படி நன்னிலைத் தொகை ரூ.5,400/–ம் , பார்வை 7–ல் காணும் அரசாணையின்படி OSR கட்டணம் ரூ.1,10,000/–ம், பார்வை 12–ல் காணும் சுற்றறிக்கையின்படி வளர்ச்சிக் கட்டணம் ரூ.8000/– ம், கொடிநாள் நிதி ரூ.2,000/–ம் மற்றும் தமிழரசு சந்தா ரூ.2000/–ம் மனுதாரர் செலுத்தப்பட்டதற்கான விவரம் பெறப்பட்டுள்ளது.

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு
நிபந்தனைகள்– 2 தொகுப்பு

உறுப்பினர் செயலர்/துணை இயக்குநர்,
ஒசூர் புதுநகர் வளாச்சிக் குழுமம்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர்.

பெறுநர்:

1. ஆணையாளர்,
   ஒசூர் மாநகராட்சி, ஒசூர்.

நகல்:

1. திரு.எம்.வி.அஸ்வினி,
   க.எண்.108, அஸ்வினி 8வது மெயின்,
   13வது ஏ கிராஸ், பி.டி.எம்.லேஅவுட்,
   பெங்களூர் – 560 078.

   (உத்தரவு கடிதம் மட்டும்)

2. The Chairman
   Tamilnadu Real Estate
   Regulatory Authority,
   No.1A, 1st Floor, CMDA Tower – 2,
   Egmore, Chennai – 600 008.

3. உதவி இயக்குநர்,
   நிலஅளவியல் துறை,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   கிருஷ்ணகிரி மாவட்டம்.

4. சார்பதிவாளர்,
   சார்பதிவாளர் அலுவலகம்,
   ஒசூர்.

5. இருப்புக்கோப்பு

   (வரைபடம்–1 (ம) நிபந்தனைகள் படிவம்–1)

நகர் ஊரமைப்புத் துறை

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம்,
ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், ஒசூர்

கோப்பு எண்.2619/2020/கிமா(ஒபுநவகு) நாள்: 30.05.2022

மனைப்பிரிவு ம.வ./ஒ.பு.ந.வ.கு.(கிமா)எண்.47/2022 ஒசூர் மாநகராட்சி,
மூக்கொண்டப்பள்ளி கிராமம்.

மனைப்பிரிவு நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
2. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்பட வேண்டும்.
3. மேற்குறிப்பிட்ட இரு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்பு எந்த ஒரு மனையையும் விற்கவோ, குத்தகைக்கு விடவோ வேறு எந்த விதத்திலும் பரிமாற்றம் செய்யவோ அல்லது எந்த மனையிலும் கட்டடம் கட்டவோ கூடாது.
4. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம் மாற்றம் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR–2019-ல் குறிப்பிட்டுள்ள Residential use-ல் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.
5. மனையின் ஊடே குறைந்த அழுத்த / உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால், கம்பிப்பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் காண்பித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.
6. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெரு மட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
7. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.
8. மனுதாரர் மனைப்பிரிவு தொடர்புடைய ஒப்புதல் பெற்றுக்கொள்ள வேண்டும். மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டடத்திற்கும் நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற வேண்டும்.
9. அ. மேற்படி மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்புத் துறையால் திட்ட அனுமதி/இசைவு (Planning Permission/Concurrence) மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பதால், மனைப்பிரிவிற்கான இட உரிமை தொடர்பாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும்.

   ஆ. மேற்படி மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியால் அங்கீகாரம் அளிக்கப்படும்போது அங்கீகார நிர்வாக அதிகாரியின் முன்னிலை நடவடிக்கையின் நகலினை இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்ப வேண்டும். இதில் பொது திறவிடங்கள் உள்ளாட்சியிடம் ஒப்படைத்ததற்கான சான்றும் இணைக்கப்பட வேண்டும்.

...2

10. மனுதாரர், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம்/விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6அடி x 4 அடி அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்காகவும் மேலும் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும், நாளும் தெளிவாக குறிப்பிட்டு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

11. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமை குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே, உண்மையில் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்கு எந்த உரிமையும் கொண்டாட முடியாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

12. நில உரிமை மறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு Planning Permission/Concurrence ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட Planning Permission/Concurrence ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.

13. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போத இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்

விவரம்		பரப்பளவு
மனைப்பிரிவின் மொத்த பரப்பு	:	0.9266 ஏக்கர் (அ) 3750.00 ச.மீ
கோரிய மனைகள்	:	17 மனைகள்
ஒதுக்கிய மனைகள்	:	17 மனைகள்
உத்தேச மனைப்பிரிவு சாலை பரப்பு	:	1626.16 ச.மீ.
மனைப்பிரிவு பரப்பு (சாலை பரப்பு நீங்கலாக)	:	2123.84 ச.மீ.
உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:		
உள்ளாட்சிக்கான பொது ஒதுக்கீடு	:	15.92 ச.மீ. (0.75 %)
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கான பொது ஒதுக்கீடு	:	14.87 ச.மீ. (0.70 %)

30/05/2022

உறுப்பினர் செயலர்/துணை இயக்குநர்,
ஒசூர் புதுநகர் வளாச்சிக் குழுமம்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர்.

30/05/2022